

சென்னை, லயோலா கல்லூரியில், கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, சாதனைகள் படைத்த முன்னாள் மாணவர்களுக்கு விருதுகள் வழங்கி, பாராட்டி பேசினார். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் நா.எழிலன், இனிகோ இருதயராஜ், சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பாதர் ஜோ அருண், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜே.சி.டி.பிரபாகரன், ராஜாதாஸ், ரவிதாஸ், எம்.கே.நாராயணன், சந்தோஷ் மேத்யூ, தியாகராஜன்குமார், வித்யா பிள்ளை, அனந்த பத்மநாதன், ராதாகிருஷ்ணன், பாலகோபால், சந்திரசேகர் ஐ.ஏ.எஸ், நடிகர் அரவிந்த்சாமி, லால்குடி ஜி.ஆர்.கிருஷ்ணன், மாணவர் சங்கத்தின் தலைவர் முனைவர் ஜி.விசுவநாதன், இயக்குநர் பாதர் லூயி ஆல்பர்ட், துணைத் தலைவர்கள் தமிழரசு, ஜேவியர் பிரிட்டோ, அசோகன், ராபன் ஜேக்கப், ஜாக் ஜெரியன், லயோலோ முன்னாள் மாணவர் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சாதனைகள் படைத்த முன்னாள் மாணவர்களுக்கு விருதுகள்!

## சென்னை – லயோலா கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு!

**சென்னை,ஆக.7 –**

**சென்னை, லயோலா கல்லூரியில், அந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, சாதனைகள் படைத்த முன்னாள் மாணவர்களுக்கு விருதுகள் வழங்கி, பாராட்டி பேசினார்.**

அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு:–

இந்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கடந்த இரண்டு வருடங்களாக நான் கலந்துகொள்ள வேண்டும் என்று தொடர்ந்து, நம் கல்லூரி முதல்வர் அவர்களும் மாணவர்களும் என்னைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்த வருடம் தான் கலந்துகொள்கிற வாய்ப்புக் கிடைத்துள்ளது. மூன்று நாட்களுக்கு முன்பு லயோலா கல்லூரியின் நூறாவது வருடக் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடந்தது.

### வாழ்த்துகள்

நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்தார். அப்போது, அந்த நிகழ்ச்சிக்கு என்னால் வர முடியவில்லை. நான் அப்போது சுற்றுப்பயணத்தில் இருந்தேன். இந்த நேரத்தில் லயோலா கல்லூரியில் நூறாவது வருடக் கொண்டாட்டத்திற்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு, என்னை அழைக்கும் போது, `பல பேருக்கு விருதுகள் கொடுக்கவேண்டும்' என்று சொன்னார்கள். நான், `எனக்கு விருது இல்லையா' என்று கேட்டேன். `இல்லை நீங்கள் வந்தால் போதும்' என்று சொன்னார்கள். பரவாயில்லை. விருது வாங்கிய அத்தனைப் பேருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### முன்னாள் மாணவனின் தந்தை

கல்லூரியின் நூறாவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசும் போது நமது முதலமைச்சர் அவர்கள், `நான் இங்கு முதலமைச்சராக வரவில்லை. ஒரு முன்னாள் மாணவனின் தந்தையாக வந்திருக்கிறேன் என்று பெருமையாக கூறியிருந்தார்கள்.

அதுபோல இப்போது நான் இங்கு அமைச்சராகவோ, சட்டமன்ற உறுப்பினராகவோ வரவில்லை. நானும் ஒரு முன்னாள் மாணவன் என்ற உரிமையோடு வந்து கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.



கல்லூரிகளில் ஒவ்வொரு துறையிலும் 'இந்தப் படிப்புப் படிக்க வேண்டுமா இந்தக் கல்லூரிக்கு செல்லுங்கள், அந்தக் கல்லூரிக்குச் செல்லுங்கள்' என்று சொல்வார்கள். ஆனால், லயோலாவில் மட்டும் பார்த்தீர்கள் என்றால், எல்லா துறைகளுமே சிறப்பு.

எந்தத் துறையை எடுத்தாலும், அதில் ஒரு சிறப்பான மாணவர் இருப்பார். அந்த அளவிற்கு 'லயோலா கல்லூரியில் படிக்கப் போகிறேன்' என்பதே ஒரு மிகப் பெரிய பெருமை. நான் எக்மோர் டான்பாஸ்கோ பள்ளியில் படித்து முடித்து 92 சதவிகிதம் பெற்றேன்.

> ### “ சீட்டு கிடையாது! ”
>
> நீங்கள் ஒரு கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டும். கல்லூரியில் நடக்கக்கூடிய தேர்தலில் எந்த விதத்திலும் நீங்கள் தொடர்பு படுத்திக் கொள்ளக் கூடாது. தேர்தலில் நிற்கவே கூடாது', என்று என்னிடம் சத்தியம் வாங்கிக்கொண்டுதான் சீட் கொடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு நான் ஒரு சட்டமன்ற உறுப்பினராகி, தேர்தலில் நின்று வெற்றி பெற்று அமைச்சராக வந்திருக்கிறேன் என்றால், அது இந்த லயோலா கல்லூரியின் வளர்ப்புதான் காரணம்.

லயோலோ கல்லூரி வணிகவியல் துறைக்கு விண்ணப்பம் செய்துவிட்டு, ஜாலியாக வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். என்னை அழைத்து உனக்கு சீட்டு கிடையாது என்று சொல்லி விட்டார்கள். அப்போது, என் தாத்தா முதலமைச்சர் கிடையாது. என் அப்பா அமைச்சரும் கிடையாது. வெறும் சட்டமன்ற உறுப்பினர்தான். அப்போது நான் கலந்தாய்விற்கு வந்தாக வேண்டும் என்றார்கள்.

நான் வந்தேன். ஏன் சீட்டு இல்லை என்றார்கள் என்றால், 'நாங்கள் கொடுக்கமாட்டோம். உங்கள் பெற்றோரை அழைத்து வாருங்கள்' என்று சொன்னார்கள். அதன் பிறகு, என் அம்மாவை அழைத்துக் கொண்டு போனேன்.

என் அம்மாவிடம் சொன்னார்கள், `நீங்கள் ஒரு கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டும். கல்லூரியில் நடக்கக் கூடிய தேர்தலில் எந்த விதத்திலும் நீங்கள் தொடர்புபடுத்திக் கொள்ளக் கூடாது. தேர்தலில் நிற்கவே கூடாது', என்று என்னிடம் சத்தியம் வாங்கிக்கொண்டுதான் சீட் கொடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு நான் ஒரு சட்டமன்ற உறுப்பினராகி, தேர்தலில் நின்று வெற்றி பெற்று அமைச்சராக வந்திருக்கிறேன் என்றால், அது இந்த லயோலா கல்லூரியின் வளர்ப்புதான் காரணம்.

### கல்விப்பணி

நான் இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், அந்த அளவிற்கு யாராக இருந்தாலும், மிக மிக தகுதி பார்த்துத்தான் சேர்ப்பார்கள். மிகவும் கண்டிப்பான கல்லூரி. அப்படிப்பட்ட கல்லூரி இன்று விருது வழங்குகிறது. அதைப் பெறுகிற நீங்கள் எல்லோரும் அந்த விருதிற்கு உண்மையாகவே தகுதி பெற்றவர்கள் தான். இந்தக் கல்லூரியின் கல்விப் பணி மட்டுமல்ல, உங்களின் சமூகப் பணியும் நல்ல முறையில் தொடர வேண்டும் என்று கூறிக்கொண்டு, வாய்ப்பளித்த அத்தனைப் பேருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, விடை பெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

லயோலா கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் எழிலன், இனிக்கோ இருதயராஜ், சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பாதர் ஜோ அருண், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜே.சி.டி.பிரபாகரன், ராஜாதாஸ், ரவிதாஸ், எம்.கே.நாராயணன், சந்தோஷ் மேத்யூ, தியாகராஜன்குமார், வித்யா பிள்ளை, அனந்த பத்மநாதன், ராதாகிருஷ்ணன், பாலகோபால், சந்திரசேகர் ஐ.ஏ.எஸ், நடிகர் அரவிந்த்சாமி, லால்குடி ஜி.ஆர். கிருஷ்ணன், மாணவர் சங்கத்தின் தலைவர் முனைவர் ஜி.விசுவநாதன், இயக்குநர் பாதர் லூயி ஆல்பர்ட், துணைத் தலைவர்கள் தமிழரசு, ஜேவியர் பிரிட்டோ, அசோகன், ராபன் ஜேக்கப், ஜாக் ஜெரியன், லயோலோ முன்னாள் மாணவர் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

---

சென்னையில் செயல்படுத்தப்பட்டு வரும்

# முக்கியத் திட்டங்கள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

*சென்னை, ஆக. 7 -*

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் - சென்னை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு சென்னையில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை நான்கு வழித்தட உயர்மட்டச் சாலை அமைத்தல்.

ராஜிவ் காந்தி சாலையையும் கிழக்கு கடற்கரை சாலையையும் இணைக்கும் இணைப்புச் சாலை.

ராஜிவ் காந்தி சாலையில் டைடல் பூங்கா சந்திப்பில் நடைபெறும் “U” வடிவ மேம்பாலப் பணி.

பெருங்களத்துரர் இரயில்வே மேம்பாலப் பணி.

தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை,

மத்திய கைலாஷ் சந்திப்பில் நடைபெறும் மேம்பாலப் பணி,

மேலும் சென்னை மாநகரில் செயல்படுத்தப்பட வேண்டிய கீழ்க்கண்ட தொலைநோக்குத் திட்டங்களின் சாத்தியக் கூறு குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

கலங்கரை விளக்கம் முதல் கொட்டிவாக்கம் வரை கடல்வழிப்பாலம் அமைத்தல்.

திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை உயர்மட்டச் சாலை அமைத்தல்.

மீனம்பாக்கம் விமான நிலையம் முதல் தாம்பரம் வரை உயர்மட்டச் சாலை அமைத்தல்.

பாடி முதல் திருநின்றவூர் வரை உள்ள சாலையில் ஐந்து சந்திப்புகளில் மேம்பாலம் அமைத்தல்.

பல்லாவரம் முதல் சென்னை வெளிவட்டச் சாலையை இணைக்கும் உயர்மட்டச் சாலை.

படப்பை - மணிமங்கலம் - வரதராஜபுரம் வரையான சாலையை இணைக்கும் புறவழிச்சாலை அமைத்தல்.

மேலும் நகர்ப்புறங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் முக்கிய மாநகரங்களான மதுரை, திருச்சி, கோயம்புத்துரர், ஒசூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றில் நடைபெறும் முக்கியப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

### சென்னை எல்லைச் சாலை திட்டம் (CPRR)

சென்னை மற்றும் எண்ணூார் துறைமுகங்களில் கையாளும் ஏற்றுமதி இறக்குமதி பொருட்களை ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களால், சென்னை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் மாநிலத்தின் தெற்குப் பகுதியிலிருந்தும், மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்கள் எண்ணூார் மற்றும் காட்டுப் பள்ளி துறைமுகங்களுக்கு சென்றடைய, சென்னை பெருநகரத்தின் வணிக மற்றும் தொழில் வளத்தினை அதிகரிக்கும் வகையில் ”சென்னை எல்லைச் சாலை திட்டம்” 133 கி.மீ நீளத்தில் (நில எடுப்பு உட்பட) ரூ.16,212.40 கோடி மதிப்பீட்டில் ஆறு வழி சாலையுடன் கூடிய இரு புறமும் இரு வழி சேவைச்சாலை அமைக்கப்பட உள்ளது. இந்த பணிகள் ஐந்து கட்டங்களாக எண்ணூார் துறைமுகம் முதல், தச்சூர், திருவள்ளூர் புறவழிச்சாலை, திருப்பெரும்புதுார், சிங்கபெருமாள் கோவில் வழியாக மாமல்லபுரம் வரை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை எல்லைச் சாலைப் பணிகளில் முதல் கட்டப் பணிகள் எண்ணூார் துறைமுகம் முதல் தச்சூர் வரை 25.40 கி.மீ. நீளத்திற்கும் ரூ.4290 கோடி மதிப்பீட்டிலும் (நில எடுப்பு உட்பட) இரண்டாம் கட்டப் பணிகள் தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழிச்சாலை வரை 26.10 கி.மீ. நீளத்திற்கு ரூ.2259 கோடி மதிப்பீட்டிலும் (நில எடுப்பு உட்பட) நடைபெற்று வருகின்றன.

மேற்கண்ட பணிகள் குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் தாமரைப்பாக்கத்தில் கள ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட திட்டங்களை விரைவாகவும், தரத்துடனும் செயல்படுத்தி முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேற்கண்ட ஆய்வு கூட்டம் மற்றும் கள ஆய்வில் பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் எ.வ. வேலு, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, நெடுஞ்சாலை மற்றும் துறைமுகங்கள் துறை அரசு செயலாளர். மருத்துவர். ஆர்.செல்வராஜ், சென்னை எல்லைச் சாலைத் திட்டத்தின் இயக்குநர் சி.அ. .ராமன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர். டாக்டர் த. பிரபு சங்கர், தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வீட்டுக்கே பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கும்

# சேவை (கிக்) தொழிலாளர்களுக்கு இழப்பீடு - பணிப் பாதுகாப்பை உறுதி செய்திடுவீர்!

## மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஆக. 7 -*

வீட்டுக்கே பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கும் சேவை (கிக்) தொழிலாளர்களுக்கு இழப்பீடு - பணி பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநிலங்களவையில் பேசிய திருச்சி சிவா வலியுறுத்தினார்.



மாநிலங்களவையில் திருச்சி சிவா பேசியதாவது:

வீட்டுக்கே பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கும் சேவை தொழிலாளர்களின் (GIG Workers) பாதுகாப்பு பற்றிய முக்கியமான பிரச்சினையில் உங்கள் மூலமாக சிறப்புமிக்க இந்த அவையில் அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

தனியார் நிறுவனங்களால் சுரண்டப்படும் இந்த தொழிலாளர்களை மீட்டெடுக்க வேண்டும். நேர கட்டுப்பாடு இன்றி சில தளர்வுகளோடு கிக் பொருளாதாரம் (GIG Economy) வருமான வாய்ப்பு தருவதால் தற்போது 80 லட்சம் பேர் இதில் பணிபுரிகிறார்கள். இந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 2030ல் 2.3 கோடியாக உயரும் என்று நிதி ஆயோக் அறிக்கை குறிப்பிடுகிறது.

போதுமான பாதுகாப்பின்மையாலும் மரியாதை குறைவான நடத்தைகளினாலும் இந்த தொழிலாளர்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள்.

### 80 லட்சம் பேர் பணியாற்றுகின்றனர்!

கொரோனா .. பெருந்தொற்றுக் காலத்தில் ஒட்டுனர்களாக, வீடுகளுக்கு நேரடியாக சென்று பொருட்களை சேர்ப்பவர்களாக, முகவர்களாக பணியாற்றிய இந்த கிக் தொழிலாளர்களின் பங்கு , இவர்களின் முக்கியத்துவத்தையும் பொருளாதாரத்திற்கு தந்த பங்களிப்பையும் தெளிவாக உணர வைத்தது,!

யார் இந்த கிக் பணியாளர்கள் என்பது பலரின் கேள்வியாக உள்ளது. சொமாட்டோ ஸ்விக்கி, டன்சோ, ஓலா, ஊபர், (Zomato, Swiggy, Dunzo, Ola, Uber) போன்றவற்றில் பணியாற்றுபவர்கள் தான் இந்த கிக் பணியாளர்கள். 80 லட்சம் பேர் இந்த வேலையை பார்க்கின்றனர்.

ஒட்டுமொத்த உலகமே முடங்கி கிடந்த போது மக்களின் அத்தியாவசிய தேவைகளை இவர்கள் பூர்த்தி செய்தார்கள். இது இவர்களின் மிக மிக முக்கியமான பாராட்டுக்குரிய சேவை.

ஆனால் இப்போது வெளியாகியிருக்கும் பல அறிக்கைகள் இந்த தொழிலாளர்கள் மிகவும் வேதனை தரத்தக்க நிலையில் உள்ளதாக கூறு கின்றன. இவர்களுக்கு நிர்ணயிக்கப்படும் இலக்குகளை சில தவிர்க்க முடியாத காரணங்களினால் எட்ட முடியாதபோது இவர்களுக்கான மருத்துவ காப்பீடு குறைக்கப்படு கிறது அல்லது நீக்கப்படுகிறது. இதன் விளைவாக அவசரகால மருத்துவ தேவையில் அவர்களது குடும்பங்கள் பெருமளவிற்கு கடுமையாக பாதிக்கப்பட நேர்கிறது.

### விபத்து காப்பீடு வழங்கிடுக!

ஒட்டுமொத்த உலகமே முடங்கி கிடந்த போது மக்களின் தேவைகளை இவர்கள் பூர்த்தி செய்தார்கள். இது இவர்களின் மிக மிக முக்கியமான பாராட்டுக்குரிய சேவை. உணவு விநியோக தளத்தில் பணியாற்றும் கிக் தொழிலாளர்களுக்கு எந்தவித குழப்பமும் இல்லாத தெளிவான கொள்கையோடு விபத்து காப்பீடு வழங்க வேண்டும்.

தற்போது உலகளவில் பல நாடுகளில் இந்தத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு தரப்படும் உரிமைகளும் சலுகைகளும் நம் நாட்டில் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். வேலை பாதுகாப்பின்மை இவர்கள் ஒற்றுமைக்கு தடையாக உள்ளது. இது இவர்களுக்கு மிகப் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

அமைப்பு சார்ந்த சேவை தொழிலாளர்களுக்கு கிடைப்பது போல் நன்மைகளும் சலுகைகளும் இவர்களுக்கு கிட்டுவதில்லை .காரணம் கிக் தொழிலாளர்கள் சுதந்திரமான காண்ட்ராக்டர்களாக கருதப்படுவதுதான்.!

வேலை செய்யும் பணியாளர்கள் என்பதற்கு பதிலாக அவர்களை பங்குதாரர்கள் என்றும் முகவர்கள் என்றும் அழைக்கிறார்கள். உச்ச நீதிமன்றம் கிக் பணியாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் மகப்பேறு மற்றும் மருத்துவ காப்பீட்டு பலன்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளது. பல்வேறு மாநில சட்டமன்றங்களில் இந்த கிக் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு நியாயமான சட்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

### தேசிய அளவில் ஒழுங்குபடுத்த கட்டமைப்பை உருவாக்கிடுக!

நான் ஒன்றிய அரசை வலியுறுத்துவது என்னவென்றால் ஒழுங்கமைக்கப்பட்ட துறைத் தொழிலாளர்களைப் போலவே இந்த கிக் தொழிலாளர்களுக்கும் இழப்பீடு மற்றும் பணிப் பாதுகாப்பினை உறுதி செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். கிக் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்த தேசிய அளவில் ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். சேவைத் துறையில் உள்ள மற்ற தொழிலாளர்களைப் போலவே சரிசமமான தர நிலையை உருவாக்குமாறு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.